**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 05.08.2025**

**O.S. 34/2023**

**வா.சா. 1 - ரெத்தினசிகாமணி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இந்த வழக்கில் மொத்தம் 4 வாதிகள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 3, 4 வாதிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் 3, 4 வாதிகளுக்கு வேண்டி தாக்கல் செய்வதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலம் தயார் செய்வதற்கு விபரம் சொல்லி கொடுத்தது யார் என்றால் நான்கு வாதிகளும் சேர்ந்து தான் சொல்லிகொடுத்தோம். இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 12 ¼ சென்ட் கோவில் அனுபவித்து வரும் நிலத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு தாக்கல் செய்துள்ளோம்.

வழக்கு பட்டிகை சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் நாங்கள் இவ்வழக்கினை 1வது வாதி திருக்கோவிலுக்கு சொந்தமான பிராது தபசில் சொத்தின் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் மேற்படி பிராது தபசில் சொத்து கோவிலுக்கு பாத்தியப்படவில்லை என்றால் சரிதான். ஆகையால் பிரமாண வாக்குமூலத்தில் வழக் குபட்டிகை சொத்து கோவிலுக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரிதான். வழக்குரையில் வழக்கு பட்டிகை சொத்து எத்தனை சென்ட் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 47½ சென்ட் என்று

குறிப்பிட்டுள்ளேன். வழக்குரையில் வழக்கு பட்டிகை சொத்திற்கு எல்கைகள் மேற்கு ரோடு, தெற்கு ரோடு, கிழக்கு பக்கம் ரோடு மற்றும் வடக்கு பக்கம் தெய்வநாயக பெருமாள் மற்றும் பலரின் சொத்துக்கள் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையில் வழக்கு பட்டிகை சொத்தின் விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். நான் கல்லூரியில் பேராசிரியராக இருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். வழக்குரையில் வழக்கு பட்டிகை சொத்தின் விபரங்கள் கூறமுடியுமா என்றால் 47½ சென்ட்.

வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரணம், எல்கைகள், விபரங்கள் தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் வடக்கு பகுதி ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அருகுலமாட நாடாருக்கு பாத்தியப்பட்டது. தெற்கு பகுதியும் வடக்கு பகுதியும் சேர்ந்து மொத்தம் 51 சென்ட் அருகுலமாட நாடாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அருகுலமாட நாடாருக்கு இரண்டு மகன்கள் இருப்பது தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் பெயர் பொன்னுசாமிநாடார், சிவசுப்பிரமணியன் என்றால் சரிதான். பொன்னுசாமிநாடாருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் என்றால் சரிதான் அவர்கள் பெயர்கள் நாடாச்சி தங்கம், நேசபாண்டிய நாடாச்சி.

நேசபாண்டிய நாடாச்சிக்கு தங்கம்மை என்ற மறுபெயரும் உண்டு என்றால் சரிதான். 51 சென்ட்டின் பழைய சர்வே எண்.3676 என்றால் சரிதான். அருகுலமாட நாடாரின் மகன்கள் பொன்னுசாமிநாடார், சிவசுப்பிரமணியன் இருவரும் 51 சென்ட் சொத்தையும் அதனுனோடு இதர சொத்துக்களையும் சேர்த்து நாகர்கோவில் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.124/1108ME (1933) ன் படி பாகம் வைத்தது தெரியுமா என்றால் தெரியாது.

வழக்குபட்டிகை சொத்தில் சிவசுப்பிரமணியநாடாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் மொத்தம் 23 ½ சென்ட் விலைக்கு வாங்கினேன் மேலும் 1 சென்ட் தானமாக கொடுத்தார்கள் என்றால் சரிதான். தானமாக கொடுத்தற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற 23½ சென்ட்டும் சிவசுப்பிரமணியனின் மனைவி சிவகுரு பண்டாரத்தி நேரடியாக எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான்.

சிவகுரு பண்டாரத்தி நேரடியாக எழுதிக்கொடுத்தது 17½ சென்ட் சொத்து தான் என்றால் சரிதான் மேலும் 6 சென்ட் கூடுதலாக எழுதிக்கொடுத்தார்கள். மேற்படி 6 சென்ட்டை சிவகுருபண்டாரத்தி. பெருமாள் நாடாருக்கு எழுதிக்கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். பெருமாள் நாடார் கோவிலுக்காக வாங்கினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பெருமாள் நாடாருக்கு, சிவகுரு பண்டாரத்தி எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் பெருமாள் நாடார் கோவிலுக்காக வாங்கியது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் 17 ½ சென்ட் சிவகுரு பண்டாரத்தி, நாகமணி என்பவருக்கு இந்து நாடார் சமுதாய வகைக்கு வேண்டி எழுதிக்கொடுத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் 6 சென்ட் இந்து நாடார் சமுதாயத்திற்கு வாங்கியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 6 சென்ட் இந்து நாடார் சமுதாயத்திற்கு வாங்கியதற்கான வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை.

வா.சா.ஆ 1 மற்றும் 2 ஒரே நாளில் சிவகுரு பண்டாரத்தி எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மேற்படி எல்லைகள் பெருமாள் நாடாருக்கு விலைக்கு கொடுத்திருக்கும் 6 சென்ட்டுக்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் மனைவி 2 முதல் 5 ம் பிரதிவாதியின் தாயாரான நாடாச்சி தங்கம் மற்றும் அவரது சகோதரி

நேசபாண்டிய நாடாச்சி ஆகியோர்களின் தாயார் பெயர் ராமநாடாச்சி என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் ராமநாடாச்சி மக்கள் சொத்திற்கும் வடக்கில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாராயணசுவாமி கோவிலுக்கும் என் தனது கிடப்புக்கும் கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெய்வநாயக பெருமாள் நாடார் சொத்திற்கும் தெற்குமான என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாராயணசுவாமி கோவில் இருந்த இடத்தையும் வா.சா.1 எழுதிக்கொடுத்த சிவகுருநாடாச்சி கைவசம் வைத்திருந்த சொத்தையும் விலைக்கு வாங்கியதாக காட்டுவதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

நாராயணசுவாமி கோவில் இருந்த இடம் மற்றும் அந்த கோவிலும் எனக்கு பாத்தியப்பட்ட இடம் இல்லை வாதிக்கு கோவிலுக்கு வேண்டி வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. சிவகுரு பண்டாரத்தியின் மகன் அருதகுட்டி என்றால் சரிதான். சிவசுப்பிரமணியநாடார் இறந்த உடன் அவரது மனைவி சிவகுரு பண்டாரத்தியின் மகன் அருதகுட்டி இருவருக்கும் சொத்து கிடைத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.1விலைக்கு வாங்கும் சமயத்தில் அருதகுட்டி உயிருடன் தான் இருந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் அருதகுட்டி எனக்கு எழுதிக்கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான் அவர் மனநிலை பாதிக்கப்பட்டவராக இருந்தார். அருதகுட்டி மனநிலை பாதிக்கப்பட்டதால் அவருக்கு வேண்டி அவரது தாயார் எழுதிக்கொடுத்ததாக வா.சா.ஆ.1ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

மருதகுட்டியின் சொத்தை விற்பதற்காக மனநிலை பாதிக்கப்பட்டதன் பேரில் கார்டியர் நிர்ணயம் செய்ய அவரது தாயார் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கோவிலில் உள்ள உள்ள இரண்டு  சென்ட்டுக்கும் அதனை சுற்றி உள்ள

சிவகுருபண்டாரத்தி கைவசம் இருக்கும் சொத்திற்கும் டிரஸ்டின் பெயரில் பட்டாவோ ரசீதுகளோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் 17 செனட் வாங்குவதற்கு முன்பு முன் ஆவணங்களை பார்வையிட்டது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. நான் 2019 ம் ஆண்டில் தலைவர் பொறுப்பிற்கு வரும் முன்பாக டிரெஸ்டில் எந்தெந்த நேரத்தில் என்னென்ன நடந்தது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். நான் பொறுப்பிற்கு வந்த பின் உள்ள ஆவணங்கள் குறித்து தான் தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் 2 முன்னாள் பொறுப்பில் இருந்தவர்கள் என்னிடம் தந்தார்கள் என்றால் சரிதான். கோவிலில் உள்ள உள்ள இரண்டு செனட்டுக்கும் அதனை சுற்றி உள்ள சிவகுருபண்டாரத்தி கைவசம் இருக்கும் 1 ½ செனட் சொத்திற்கும் சேர்த்து பொன்னுசாமி நாடாருக்கும் சிவசுப்பிரமணிய நாடார் குடும்பத்திற்கும் பொதுவாக பாத்தியப்பட்ட சொத்து, கோவிலும் பொது கோவில் என்று 1933 ல் நாகர்கோவில் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 125/1108 எம்.இ என்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது ஆகையால் 1ம் வாதி கோவில் எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல.

கோவிலின் தெற்கு பக்கம் இருக்கும் சொத்து 24½ என்றால் 26½ செனட். வழக்கு பட்டிகை சொத்தானது மேற்படி 26 ½ செனட்டின் ஒரு பகுதி என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் பட்டா கரத்தீர்வை அனைத்தும் பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல முழுமையாக இல்லை. பிரதிவாதியின் பெயரில் 9 செனட்க்குதான் பட்டா உள்ளது என்றால் சரிதான். மீதி 15 ½ செனட்டும் யார் பெயரில் பட்டா இருக்கிறது என்றால் 3 செனட் கோவில் பெயருக்கு, மீத முள்ள செனட் நேசபாண்டிய நாடாச்சி பெயருக்கு இருக்கும். நேசபாண்டிய நாடாச்சி 2 முதல் 5 பிரதிவாதிகளின் சித்தி 1ம் பிரதிவாதியின் சகோதரி என்றால் சரிதான். மேற்படி நான் குறிப்பிட்டுள்ள 26½ செனட்டும் நேசபாண்டிய

நாடாச்சி மற்றும் அவரது சகோதரி நாடாச்சி தங்கத்திற்கும் அவரது தகப்பனாரிடமிருந்து கிடைக்கப்பெற்றது என்றால் 24 ½ சென்ட் கிடைக்கப்பெற்றது மீதம் இரண்டு சென்ட் தானமாக கிடைத்தது.

மேற்படி 2 சென்ட் யார் யாருக்கு தானம் கொடுத்தார் என்றால் அறகுல மாடநாடாருடைய இரண்டு மகன்கள் கோவிலுக்காக கொடுத்தது. அறகுல நாடாருடைய மகன்கள் தானம் கொடுத்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எந்த ஆவணத்தின் படி தானமாக கொடுத்தது என்றால் 2915/1974 ஆவணத்தின் படி. மேற்படி 2915/1974 ஆவணம் ராமநாடாச்சி அவரது மகன்களுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம். மேற்படி 2915/1974 ஆவணம் ராமநாடாச்சி அவரது மகன்களுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. ராமநாடாச்சி எழுதிக்கொடுத்த ஆவணம் என்ன ஆவணம் என்றால் பாகபத்திர ஆவணம். ராமநாடாச்சி எழுதிய ஆவணம் அனைவரும் சேர்ந்து எழுதிய ஆவணம் ராமநாடாச்சி மகன்களுக்கு எழுதிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. தானம் கொடுத்ததற்கான ஆவணம் இல்லை என்பதால் தானம் கொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் தான் தானம் கொடுக்க முடியும் நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 பாகபத்திரத்தில் மேற்படி 24 ½ சென்ட் 7 வது பட்டிகையில் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ல் 51 சென்டில் தென்வடல் சப்டிவிஷன் தென் வடல் பங்கு இரண்டாக மேற்கு பக்கம் 12¼ புறயிடமும் அதில் உட்பட்ட விருட்சங்களும் மேற்படி வடக்கு பங்கில் 2 சென்ட்டில் இருக்கும் நாராயண சுவாமி கோவிலில் உள்ள அவகாசமும் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 நேசபாண்யடி நாடாச்சி அவரது சகோதரி

நாடாச்சி தங்கம் மற்றும் அவரது தாயார் ராமநாடாச்சி ஆகியோர் எழுழுதிக் கொடுத்த பாகப்பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ல் கூறிய விபரங்கள் சரிதான் என்றால் சரிதான். நாராயண சுவாமி கோவிலில் சுவசுப்பிரமணிய நாடாருக்கும் பொன்னுசாமி நாடாருக்கும் குடும்ப கோவிலாக பாத்தியப்பட்டதால் வா.சா.ஆ.8 ல் நேசபாண்டிய நாடாச்சிக்கும், நாடாச்சி தங்கத்திற்கும் உரிமை உண்டு என்று குறிப்பிட்டுள்ளது ஆகையால் 1ம் வாதி கோவிலுக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

24½ செண்ட்டில் மேற்கு பக்கம் 12¼ செண்ட் சொத்து நாடாச்சி தங்கத்திற்கும் கிழக்கு பக்கம் 12 ¼ செண்ட் நேசபாண்டிய நாடாச்சிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 24 ½ செண்டில் ராமநாடாச்சிக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். 24 ½ செண்ட்டில் மேற்கு பக்கம் 3 செண்ட் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் மேற்படி 3 செண்டை ராமசாமியின் வாரிசிடம் இருந்து வாங்கினேன் என்றால் சரிதான். 24 ½ செண்ட்டில் கிழக்கு அற்றத்தில் தான் ராமசாமி வாங்கிய வீடு இருந்தது என்றால் சரியல்ல. நான் வாங்கிய மேற்கு பக்கம் 3 செண்டின் எல்கைகள் என்ன என்றால் கிழக்கு பக்கம் ரோடு உள்ளது என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வாங்கிய மேற்கு பக்கம் 3 செண்டின் எல்கைகள் கிழக்கு பக்கம் ரோடு, தெற்கு பக்கம் ரோடு, மேற்கு தனது கிடப்பு வடக்கு பக்கம் கோவில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது கிழக்கு பக்கம் ரோடு மட்டும் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.1ன் படி வாங்கிய 17 ½ செண்ட்டும் தற்போது என் கைவசம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி வாங்கிய 17½ செண்டில் கவர்னருக்கு 10½ செண்ட் எழுதிக்கொடுத்தேன் இன்றும் 7 செண்ட்டும் கவர்னர் பெயருக்கும் எழுதிக்கொடுத்தேன் ஆகையால் வா.சா.ஆ.1ன் படி தற்போது எவ்வித சொத்தும் என் கைவசம் இல்லை

ஆகையால் 17½ சென்ட் டிரெஸ்டுக்கு பாத்தியப்பட்டது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**